**மாலிம்பட பிரதேச சபை - 2023**

------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாலிம்பட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, மாலிம்பட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மந்திரிமார் எரிபொருள் கொடுப்பனவு ரூபா 68,400 தொகை மற்றும் 7 நிர்மாண வேலைகள் தொடர்பாக கடன்கொடுத்தோர் மீதி ரூபா 2,558,373 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் பலவின கடன் கொடுத்தோர் மீதி அதிகரித்திருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 02 கட்டிடங்களின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,540,117 இற்கான செலவுகள் காணிகள் மற்றும் | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கட்டிடங்களின் கீழ் மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | | |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 1,734,322 தொகை மிகையாகவும் மற்றும் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 207,131 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | ரூபா 185,000 தொகை பெறுமதியான பொகடுகாகஹேன ஜனஉதான கிராம சனசமூக மண்டபத்தின் பெறுமதி காணி மற்றும் கட்டிடத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றின் மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளில் இடையே ரூபா 106,941,520 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 94,146 தொகைக்கான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையினால் மீண்டுவரும் செலவை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 15,269,110 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 8,459,120 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | வருமான மூலம் | 2023 மதிப்பீட்டு வருமானம் ரூபா | 2023 சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா | 2022 மதிப்பீட்டு வருமானம் ரூபா | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| i. | வீதவரி மற்றும் வரி | 4,335,700 | 1,994,663 | 1,909,010 | 218,547 | 3,935,700 | 262,074 | 304,902 | 132,894 |
| ii. | வாடகை | 9,147,500 | 3,173,969 | 3,097,857 | 304,513 | 7,647,500 | 2,883,350 | 3,481,238 | 228,401 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,363,000 | 980,675 | 1,108,875 | - | 907,000 | 1,239,140 | 1,337,940 | 128,200 |
| iv. | ஏனைய வருமானங்கள் | 7,764,300 | 11,300,079 | 11,304,599 | 195,912 | 4,626,400 | 4,223,865 | 4,518,905 | 200,432 |
| | மொத்தம் | 22,610,500 | 17,449,386 | 17,420,341 | 718,972 | 17,116,600 | 8,608,429 | 9,642,985 | 689,927 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 68 வீதவரி அலகுகள் தொடர்பாக நிலுவை மீதி ரூபா 67,844 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 32,383 தொகை 02 வருடங்களை விட மிகையாக இருந்தது. | குறிப்பிட்ட மீதியில் 2024 மார்ச் 31 திகதி அளவில் ரூபா 25,257 இற்கான தொகையொன்று அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 134 (1) இற்கு இணங்க சபையின் அதிகாரப் பிரதேசத்தில் முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என 17 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்குரிய சுமார் 30 சதுர கிலோமீற்றர்கள் இனங்கண்டிருந்ததுடன், 2022 செப்தெம்பர் 30 திகதி 2300 இலக்கங் கொண்ட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்டிருந்தது. வீதவரி அறவீடு செய்வதற்காக சுமார் 600 ஆதனங்கள் இனங்காணப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியளவில் அந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டு ஒரு வருடத்திற்கு | புதிய வீதவரி அதிகாரப் பிரதேசத்தை விரிவுபடுத்துவதற்கு உரிய பெறுமதி மதிப்பீடு செய்து தரும்படி விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என. | பெறுமதி மதிப்பீட்டை விரைவாக பெற்றுக்கொண்டு வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மிகையான காலம் கடந்திருந்த போதிலும்; பெறுமதி மதிப்பீடு தாமதமடைந்திருந்தமையால் வீதவரி அறவீடு செய்ய முடியாமல் இருந்தது. | | |
| (இ) | சபைக்குச் சொந்தமான 02 வர்த்தக கட்டிடத் தொகுதிகளில் 43 கடையறைகளில் 42 வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் 18 கடையறைகளில் இருந்து ரூபா 267,830 இற்கான நிலுவை வருமானம் ஒன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. அவற்றில் ரூபா 34,125 இற்கான மீதியொன்று 02 வருடங்களை விட மிகையான காலம் முதல் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | 2023 ஏப்ரல் 01 திகதி அளவில் ரூபா 23,575 தொகையொன்று அறவீடு செய்யப்பட்டிருந்ததெனவும், மீதித் தொகையை நடமாடும் சேவை மற்றும் அறிவித்தல் கடிதம் மூலம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | சபைக்கு சொந்தமான 14 கடையறைகள் எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் மூடப்பட்டிருந்ததுடன் அதன் மேல் மாடிக்கு செல்வதற்காக ஒரு படி வரிசை மாத்திரம் காணப்படல், அந்த கடையறை பிரதான பாதையிலிருந்து மூடப்பட்டிருத்தல், வாடிக்கையாளர்கள் வராமையினால் மூடிவைக்க நேரிட்டிருந்தது. அங்கு 07 கடையறைகளில் இருந்து ரூபா 133,235 இற்கான வாடகைத் தொகையொன்று மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | 2023 ஏப்ரல் 01 திகதியளவில் ரூபா 128,150 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்தது எனவும் மீதித் தொகையை நடமாடும் சேவைகள் மற்றும் நினைவூட்டல் கடிதங்கள் மூலம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |
| (உ) | தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் தபபா/பபாகோ/2010/01 இலக்கம் கொண்ட மற்றும் 2010 திசெம்பர் 27 திகதியுடைய சுற்றறிக்கையின் 11 பந்தியின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக சபைக்குச் சொந்தமான கட்டிடத்தொகுதியின் 03 கடையறைகள் வேறு தரப்பினருக்கு துணை வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கையை மீறும் கடை வாடகையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என. | உடன்படிக்கையின் படி செயற்பட வேண்டும். |
| (ஊ) | சந்தை மற்றும் இறைச்சிக் கடை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட மீதி ரூபா 36,683 தொகையாக இருந்ததுடன், அந்த மீதி 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்பட்டது. | நிலுவை மீதிகள் தொடர்பாக வழக்கு அறிக்கைகளை புதுப்படுத்தி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (எ) மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2023 திசெம்பர் 31 திகதியளவில் பெற வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 415,120 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 40,516,304 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் மாதாந்தம் கிடைக்கப்பட்டு வருகின்றது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விற்பனை செய்ய முடியாத உக்காத குப்பைகளை அப்புறப்படுத்துவதற்காக சபைக்கு முறையான வேலைத்திட்டமொன்று காணப்படாமையால் அவற்றை சேதனைப் பசளை வளவில் மண் போட்டு மூடப்பட்டுள்ளதென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | உக்காத குப்பைகளை காலி மொன்டோரியா வத்தை குப்பை முகாமைத்துவ அலகுகிற்கு அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | முறையான குப்பை முகாமைத்துவத் திட்டம் ஒன்று செயற்படுத்த வேண்டும். |
| (ஆ) | 2013 ஆண்டின் போது சுல்தானாகொட கெகில்ல பிரதேசத்தில் 03 ரூட் தரைப் பரப்பில் சபையினால் குப்பை முகாகைத்துவ செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், சுமார் 11 வருட காலம் கடந்திருந்த போதிலும், மத்திய சுற்றாடல் அதிகார சபையில் இருந்து சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு மீளாய்வாண்டு இறுதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் காணப்படும் 01 ஏக்கர் 36 பர்சஸ் அளவான காணியொன்றை துண்டுகளாக பகிர்ந்து விற்பனை செய்யும் போது பாதைகள் உரிய நியமங்களில் அவை செய்யப்பட்டது என பட்டைய பொறியியலாளர் அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், காணியின் உள்ளக நுழைவுப் பாதைகள் ஆரம்பம் முதல் 24.5 மீற்றர்களுக்கும் 27.5 மீற்றர்களுக்கும் இடைப்பட்ட பகுதி தார் பரப்பு அமிழ்ந்திருந்தது. | தார் பரப்பு உள்வாங்கி பகுதியில் கொங்கிரீட் போடப்பட்டுள்ளது என. | உரிய நியமங்களில் அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் 01 ரூட் 37 பர்சஸ் அளவான காணி பகிர்வு செய்யப்பட்டு வீடமைப்புக்காக பயன்படுத்துவதற்கு நிபந்தனைகள் இன்றி 2022 ஜுன் 09 திகதிய இலக்கம் 209 கொண்ட திட்டக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், இணக்கச் சான்றுகள் வழங்கப்படாமல் விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டு காணி விற்பனை வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இது நகர அபிவிருத்தி கட்டளைகள்/ பிரமாணங்கள் அடங்கிய 2021 ஜுலை 08 திகதிய 2235/54 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் ii ஆவது பகுதியின் 27(1) மற்றும் 27(3) ஏற்பாடுகளுக்கு புறம்பாக செயற்படுவதொன்றாக காணப்பட்டது. | விளம்பரப் பலகைகள் அகற்றப்பட்டுள்ளது எனவும், காணிப் பகுதிகள் விற்பனை செய்தல் மேற்கொள்ளப்படவில்லை எனவும். | வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 2016 முதல் 2020 வரையான காலப் பகுதியில் கட்டிட விண்ணப்பப் பத்திரங்கள் 576 அங்கீகரிக்கப்பட்டு கட்டிட அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு 03 வருடங்களுக்கும் 07 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், 12 கட்டிடங்களுக்கு மாத்திரம் இணக்கச் சான்றுகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அவை | இணக்கச் சான்றுகள் பெற்றுக்கொள்ளும் படி அறிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்டிருந்த கட்டிட விண்ண எண்ணிக்கையில் 2 சதவீதமாகும். | | |
| (ஈ) | பிரதேச சபை அதிகார பிரதேசத்தை சேர்ந்த 29 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 05 பிரிவுகளில் பாதைகளை இனங்கண்டு நில அளவை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த பாதைகளின் வரைபுகள் தயாரிக்கும் அலுவல்கள் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | பாதை வரைபுகள் தயாரிக்கும் அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்யப்படும் என. | பாதை வரைபுகள் தயாரிக்கும் அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (உ) | 2021 நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் மற்றும் அபிவிருத்திக் கட்டளைகள்/ பிரமாணங்கள் அடங்கிய 2021 ஜுலை 08 திகதிய 2235/54 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரிவு 28(1) ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த அல்லது நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற 08 கட்டிடங்களுக்காக அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. அவற்றில் 06 கட்டிடங்கள் நிர்மாணிக்கும் போது கட்டிட எல்லைகள் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி கட்டளைகள்/ பிரமாணங்களுக்கு இணங்க நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்திய வரைபு சமர்ப்பிக்கும் படி அறிவிக்கப்பட்டுள்ளது என. | வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**3.3 சர்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாநாடு ஒன்றிற்கு செல்வதற்காக சபையின் உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்காக 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது ரூபா 100,100 தொகை வெளித்தரப்பினர் ஒருவருக்கு செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறான கொடுப்பனவுக்காக சட்ட ஏற்பாடுகள் காணப்படாத போதிலும் இவ்வாறு தொழிற்சங்க மாநாடுகளுக்காக உத்தியோகத்தர்கள் பங்குபற்றுவதற்கு போக்குவரத்து வசதிகள் | ஆளுனரின் ஆலோசனை கடிதத்திற்கு இணங்க செயற்பட்டதென. | தானக் கோவை, நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்குவதற்காக தனியார் தரப்பினருக்கு சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு மேற்கொண்டமை சட்டரீதியான கொடுப்பனவாக காணப்படவில்லை. | | |
| (ஆ) | 2018 மார்ச் 09 திகதி முதல் 2023 மார்ச் 09 திகதி வரை அங்கரிக்கப்பட்டிருந்த பிரதேச சபை மந்திரிமாரின் பதவிக் காலம் 2023 மார்ச் 19 வரை நீடிக்கப்பட்டவுடன், 2023 மார்ச் 19 திகதி வரை சபையின் பதவிக் காலம் முடிவடைந்திருந்த போதிலும் 2023 மார்ச் மாதத்திற்காக மந்திரிமார் கொடுப்பனவு விகிதாசாரப்படி செலுத்த வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்படாமையால் 09 மந்திரமாருக்கு ரூபா 52,254 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | அறவீடு செய்வதற்காக நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என. | சரியாக கொடுப்பனவுகள் மேற்கொள்ள வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆண்டு சபைக்கு கிடைத்திருந்த இரும்பு உருளை பயன்படுத்தப்படாமல் 2017 ஆண்டு முதல் தெலிஜ்ஜவில பழைய பிரதேச சபை கட்டிட வளாகத்தில் விளைவற்று மற்றும் பாதுகாப்பற்று நிறுத்தப்பட்டிருந்தது. | இயந்திரத்தை பரிமாற்றுவதற்காக அரச நிறுவனங்கள் ஏதும் முன்வராமையால் தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என. | சபைக்கு சொந்தமான வாகனங்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிர்மாண வேலைக் கிரயம் ரூபா 327,326 தொகையான 08 மீன் பலகைகளில் 02 உடைந்து விழுந்திருந்ததுடன், அந்த உடைந்திருந்த கூரையை குறிப்பிட்ட தரப்பினர் மூலம் நிர்மாணித்துக்கொள்வதற்கு அல்லது நட்டத்தை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஒழுங்குபடுத்துவதற்காக உரிய ஒப்பந்த சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு அவர்கள் இணங்கியிருக்கவில்லை என. | உரிய நியமங்களில் ஒப்பந்த வேலைப் பகுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும். |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் 2018 செப்தம்பர் 10 திகதி ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த சுகாதார தொழிலாளர் ஒருவருக்கு 2022 ஜனவரி 16 திகதி டிப்பர் வண்டியின் சாரதி என கடமை சாட்டப்பட்டிருந்ததுடன், 2023 ஜனவரி முதல் 2023 திசெம்பர் வரையான காலப் பகுதியில் ரூபா 396,817 தொகை சம்பளம் மற்றும் படியாக சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | சேர்க்கப்பட்டிருந்த பதவிக்குரிய சம்பளம் மற்றும் படி செலுத்தப்பட்டுள்ளது என. | சேர்க்கப்பட்டுள்ள பதவிக்குரிய கடமைகள் சாட்டப்பட வேண்டும். |